

# பிப்ரவரி மாத சுற்றுமடல்




தேதி : 28. 01. 2020

*என் அன்பான சகோதரிகளே!*

*உங்கள் ஒவ்வொருவருக்கும் என் நல் வாழ்த்துக்கள்.*

### *துறவியரின் அர்ப்பண நாள்: பிப்ரவரி 2*




ஆண்டவர் இயேசுவை கோவிலில் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட நாளை திருஅவை **“துறவியரின் அர்ப்பண நாள்”** என்பதை நமக்கு நினைவுபடுத்துகிறது. இயேசு இறைத்தந்தைக்கு அர்ப்பணிக்கப்பட்டார். அவருக்கு மட்டுமே சொந்தமானவராக அவரை மட்டுமே நம்பி வாழ்பவராக, இறையாட்சிப் பணிக்காக மட்டுமே வாழ்ந்தார். தான் இறைத்தந்தைக்கு மட்டுமே சொந்தமானவர் என்பதைத் தன் கீழ்படிதலால் எண்பித்துக் காட்டினார். இறைதந்தையின் விருப்பப்படியே எனக்கு நிகழட்டும் என்று வாழ்வதே அவரது அன்றாட உணவானது. இவரது கீழ்படிதல் சாவிற்கு இட்டுச் சென்ற பொழுதும் அதற்கும் தன்னையே கையளித்தார் இயேசு. துறவியராகிய நாமும் ஆண்டவரின் வார்த்தைக்குக் கீழ்படிந்து நடப்பது நமது கடமை. துறவிகளின் நாளாக கொண்டாடப்படும் இயேசுவின் அர்ப்பண விழாவில் துறவிகளுக்காகவும் சிறப்பாக நம் அமலவை சகோதரிகளுக்காகவும் செபிப்போம்.

சிமியோன் இயேசுவைக் கையில் ஏந்தியவுடன் தூய ஆவியால் நிரப்பப்பட்டவராய் **“பிற இனத்தார்க்கு இருளகற்றும் ஒளி இதுவே, இஸ்ரயேல் மக்களின் மாட்சிமையும் இதுவே”** எனப் பாடி இறைவனைப் போற்றுகிறார். அன்னா என்ற பெண் ஜெபத்தாலும், தபத்தாலும் உலக மதிப்பீடுகளுக்கு முற்றிலும் மாறுபட்டவராக கற்பு, ஏழ்மை, கீழ்படிதல் போன்ற மதீப்பீடுகளை ஏற்று கோவிலிலேயே தன்னை அர்ப்பணித்து வாழ்ந்தார். நம் வாழ்வு sexual, wealth, freedom போன்ற உலக மதிப்பீடுகளில் இருந்து முற்றிலும் மாறுபட்டதாக உள்ளதா? சிந்திப்போம்.

**February 11** - லூர்து அன்னையின் திருவிழா



1858 –ம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் லூர்து என்ற ஊரில் மசபியேல் குகையில் பெர்னதெத் என்ற பெண்ணுக்குத் தோன்றி **“ நாமே அமல உற்பவம் ”** என மொழிந்தார். நான்கு ஆண்டுகளுக்கு முன் அதாவது 1854 –ல் பிப்ரவரி 11 – ல் அவரை கடவுளின் தாய் ‘‘அமல உற்பவி’’ என்று திருஅவை பகிரங்கமாக அறிவித்தது. காட்சியளித்த அன்னை மரியா இயேசுவின் முதல் சீடத்தி. அன்றிலிருந்து இன்று வரை கோடான கோடி சீடர்களையும், பக்தர்களையும், இறைஊழியர்களையும் இறைவன்பால் ஈர்த்து வருகிறார். இவரின் அருள் நிலையைப் போற்றி திருத்தந்தை 2 –ஆம் அருள் சின்னப்பர் ‘‘கிறிஸ்தவர்களாக இருக்க வேண்டுமென்றால் மரியாவின் பக்தராக இருக்க வேண்டும்’’ என்கிறார். எனவே இறையருளையும், அவர் ஆசீரையும் உலகிற்கு மழையெனப் பொழிந்து வரும் நம் அன்னையிடம் நம் அருள் வாழ்விற்காக மன்றாடுவோம்.

**தவக்காலம்:**

***உறவின் அடிப்படையில்***

***உரிமையின் அடிப்படையில்***

***உண்மையின் அடிப்படையில் இறையாட்சி அமைக்க***

***தன் வாழ்வையே அதற்கு விலையாகத் தந்தவர் தான் கிறிஸ்து.***



கிறிஸ்து தனது இலட்சியத்திற்கு இணங்க மனித மாண்பிற்காகவும், அவர்களின் விடுதலைக்காகவும், நீதிக்காகவும் போராடியதற்கும் சமத்துவத்திற்கு உரிமை கோரிய போதும் அவருக்குக் கிடைத்தது மரணம்.

***ஒளி இல்லாத வீதிகளில் விளக்காய் எரிந்து***
***வசந்தம் இல்லாத வாசல்களில் வாச மலராய் மலர்ந்து***
***சுய நலம் தவிர்த்து உதவிக்கரம் நீட்டி தியாக வாழ்வு வாழ சிறப்பு அழைப்பு விடுக்கும் காலம் இத்தவக்காலம்.*** தன் வாழ்வை எடைபோட்டு, மாற்றி, இனிய வாழ்வு வாழத்தூண்டும் காலம். நம் இல்ல சகோதரிகளின், நம்மைச் சுற்றியுள்ள மக்களின் மனக்காயம் நீக்கி, அன்புகாட்ட வேண்டிய அருளின் காலம். மனிதம் மலர உரசல்கள் நீங்கி, உறவுகள் தளிர்க்க மனிதர்களாக வாழ்ந்து, மனிதரைப் புரிந்து கொண்டு புரிதலின் வெளிப்பாடாக மகிழ்ச்சியோடு வாழ வேண்டிய காலம் தான் இத்தவக்காலம்.

***மனமாற்றத்தை வலியுறுத்த வருகின்றது தவக்காலம்***
***மன்னிப்பை வலியுறுத்த வருகின்றது தவக்காலம்***
***அன்பை – அணிந்து கொள்ள அறிவுறுத்துகின்றது தவக்காலம்***

இயேசுவின் பாடுகளில் பங்குபெறும் பொருட்டு நம் வாழ்வில் வரும் ஒவ்வொரு நிகழ்வையும் அமைந்த மனதுடன் ஏற்றுக்கொள்வோம். இறைவனின் திருவுளத்தை நம் கண்முன் கொண்டு வாழ்வில் பயணிப்போம்.

நம் எண்ணங்களைப் பொறுத்துதான் நமது வாழ்வு. நாம் மகிழ்ச்சியாக இருக்கும் போது வாழ்க்கையும் மகிழ்ச்சியானதாகத் தோன்றுகிறது. நாம் துன்பப்படும்போது வாழ்க்கையும் துன்பமானதாகத் தோன்றுகின்றது. உலகத்தை நல்லதாக, அழகானதாக, இன்பமானதாக ஆக்குவது

நம் கையில் இருக்கிறது. நமக்குள் நன்மையை, அழகை, இன்பத்தை நிரப்பிக் கொண்டால் உலகமும் நல்லதாக, அழகானதாக, இன்பமானதாக ஆகிவிடும்.

நமக்குள் தீமையை, துன்பத்தை நிரப்பிக் கொண்டால் உலகமும் தீயதாக, துன்பமானதாக ஆகிவிடும். சுயநலம், பொறாமை, பேராசை இவை தீமையின் விதைகள். நம் இதயத்தில் இவற்றை விதைத்தால் உலகமும் துன்பமானதாக மாறிவிடும். மனிதன் தன்னிடம் இல்லாததை நினைத்துத் துயரப்படுகிறான். அதனால் அவனிடம் இருப்பதை காணத் தவறுகிறான். தன்னிடம் இருப்பதைக் காண்பவன் மகிழ்ச்சி அடைகிறான்.

செருப்பில்லையே என்று கவலைப்பட்டேன். காலில்லாதவனைப் பார்த்தபோது, எனக்குக் கால் இருக்கிறதே என்று மகிழ்ந்தேன். அதற்காக இறைவனுக்கு நன்றி கூறினேன் என்கிறார் பாரசீகக் கவிஞர் ஒருவர். ரோஜாச் செடியில் பூவும் இருக்கிறது, முள்ளும் இருக்கிறது. முள்ளில் பூ இருக்கிறதே என்று ஒருவன் மகிழ்கிறான். பூவில் முள் இருக்கிறதே என்று ஒருவன் கவலைப்படுகிறான்.

தம்ளரில் பாதி நீர் இருக்கிறது. 'பாதித் தம்ளர் காலியாக இருக்கிறதே' என்கிறான் ஒருவன் . பாதித் தம்ளர் நீர் நிரம்பியிருக்கிறதே என்கிறான் மற்றொருவன். பார்வையே இன்பத்தையும் துன்பத்தையும் உண்டாக்குகிறது. விமர்சகர்களில் சிலர் இருக்கிறார்கள். இவர்கள் எதிலும் குறையையே காண்பார்கள்.

ஒரு நாய் தெருவில் செத்துக் கிடந்தது. அதைச் சுற்றிக் கூட்டம் கூடிவிட்டது. திருட்டு நாய் எங்காவது திருடியிருக்கும். அடித்திருப்பார்கள். அது தான் செத்துவிட்டது என்றான் ஒருவன். நாசமாய்ப் போகிற நாய். இங்கே செத்துக் கிடப்பதால் தெருவெல்லாம் நாறுகிறது என்று திட்டினான் ஒருவன். அதன் உடம்பைப் பாருங்கள் எவ்வளவு அசிங்கமாய் இருக்கிறது என்றான் ஒருவன்.

அப்போது அதன் பற்களைப் பாருங்கள் முத்துக்களைப் போல் எவ்வளவு அழகாக இருக்கின்றன என்ற குரல் கேட்டது. எல்லோரும் வியப்போடு திரும்பிப் பார்த்தார்கள்.

இயேசு பெருமான் நின்று கொண்டிருந்தார். இயேசு பெருமானின் மனம் அழகானது. அதனால் அவர் அழகையே கண்டார். உயர்ந்தவர்கள் அருவருப்பானதில் கூட அழகைத் தேடிக் காண்கிறார்கள். சூரியன் ஒளியால் ஆனவன். அவன் தன்னையும் ஒளிர வைத்துக் கொண்டு மற்றவரின் மீதும் ஒளியை ஏற்படுத்துகிறான். அழகிய மனம் உடையவன் உலகத்தையும் அழகாக்குகிறான்.

எனவே அன்புச் சகோதரிகளே! நாம் ஒவ்வொருவரும் பச்சை நிறக் கண்ணாடி அணிந்து கொண்டால் பார்ப்பதெல்லாம் பச்சையாகத் தோன்றும். வாழ்க்கையை மாற்ற விரும்பும் நாம் நமது பார்வையை மாற்றிக்கொள்வோம். நம் பார்வைகள் நம் உள்ளுணர்வின் வெளிப்பாடு என்பதைப் புரிந்துகொண்டு பிறரை மாற்ற முயற்சி செய்யாமல் நம்மையே நாம் மாற்றிக் கொள்ள இத்தவக்காலம் துணை செய்யட்டும்.

***இவ்வாண்டை இளையோர் ஆண்டாக திருஅவை அறிவித்துள்ளது. நமது நிறுவனங்களில், பங்குகளில் வாழும் இளையோர் சிறப்பாக நமது இளம்துறவியர் ஆற்றலோடு மாற்றத்தை நோக்கிப் பயணிக்க வழிகாட்டுவோம். அவர்களுக்காக செபிப்போம்.***

*மண்ணுயிர் காக்க தன்னுயிர் தந்தார் இறைமகன் இயேசு!*
*அவர்வழி தொடர்ந்து அறப்பணி செய்ய*
*அயலகம் இருந்து நம்மகம் வந்து தம் குருதி சிந்தி செம்மண்ணாக்கி*
*மறவ நாட்டின் மா புனிதர் ஆன அருளானந்தரின் பெருவிழா காணும்*
*அன்பு சகோதரிகளே! அனைவருக்கும் நாம விழா வாழ்த்துக்கள்.*

*பிறந்த நாள், நாமவிழா காணும் அனைத்து சகோதரிகளுக்கும்*

*என் வாழ்த்துக்களும், செபங்களும்.....*

*கிறிஸ்துவில் அன்புள்ள*

*(சகோ. அல்போன்ஸ் பாத்திமா)*

# *சகோதரிகளை வாழ்த்துவோம்!!!*

| | | | |
|---|---|---|---|
| 1. | சகோ. லூமின் கிறிஸ்டி | பிப்ரவரி 04 | புளியால் |
| 2. | சகோ. மரிய அருள் தேவி | ,, | மைசூர் |
| 3. | சகோ. அருள் மேரி S | ,, | இராம்நாடு |
| 4. | சகோ. அருள் ஜோசப் மேரி | ,, | கூத்தலூர் |
| 5. | சகோ. சகாய அருள் செல்வி | ,, | சூசையப்பர்பட்டணம் |
| 6. | சகோ. அருள் மேரி S | ,, | திருச்சி |
| 7. | சகோ. அருள் ஜோதி C | ,, | முதல்சேரி |
| 8. | சகோ. அருள் ஜோதி I | " | ஆண்டாவூரணி |
| 9. | சகோ. அருள் மேரி M | ,, | ஆர்.எஸ் மங்களம் |
| 10. | சகோ. லூர்து மேரி S | பிப்ரவரி 11 | மானாமதுரை |
| 11. | சகோ. லூர்து செல்வ ராணி | ,, | லியோனார்டு இல்லம் |
| 12. | சகோ. லூர்து மேரி V | ,, | அருள்நகர் – தேவகோட்டை |
| 13. | சகோ. லூர்து மேரி F | ,, | லியோனார்டு மருத்துவமனை |
| 14. | சகோ. கபிரினி | ,, | நிர்மல்பவன் |
| 15. | சகோ. ஜெர்மனம்மாள் | பிப்ரவரி 18 | ஜோவில்லா – புளியால் |
| 16. | சகோ. மரிய ஜாஸ்மின் | பிப்ரவரி 23 'பி' | மசபியேல் இல்லம் |